**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.**

**முன்னிலை: திரு. செ. ராஜ்குமார், B.A.B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

(2055 திருவள்ளுவர் ஆண்டு பங்குனி திங்கள் 09 ம் நாள்)

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 22–ம் நாள் வெள்ளிக்கிழமை

I.A.05/2023 in O.S.No.149/2018

கோமதி ........ மனுதாரர்/வாதி

/எதிராக/

1. V.சண்முகம்
2. R.சண்முகம் ........எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.01.2024–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கனகராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.A.ஓம்பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரையையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்........

**உத்தரவு**

1) இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 18 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–**

2.1) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.2) அசல் வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருந்து மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கூடுதலாக மேலும் சில ஆவணங்களை குறியீடு செய்வதற்காக இ.ம.எண்.3/23 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்ட நிலையில் மனுதாரருக்கு திடீரென உடல்நிலை குறைவு ஏற்பட்டதால், மனுதாரர் 04.12.2023 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், அன்றைய தினம் மனுதாரர் ஆஜராகததால் மனுதாரர் தரப்பு முதல்நிலை சாட்சியம் முடிக்கப்பட்டது என்றும், எனவே மனுதாரர் தரப்பில் மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வா.சா.1 சாட்சியை திரும்ப அழைத்து (Recall) மனுதாரர் தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**3) 1–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்**</u>:–

3.1) மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் இவ்வெதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். இம்மனு சட்டத்தின்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல.

3.2) மனுதாரருக்கு உடல்நிலை குறைவு ஏற்பட்டது என்பது பொய்யானது என்பதோடு மனுதாரர் தரப்பில் குறியீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய இயலாது

என்பதால் மனுதாரர் தரப்பு மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தா? இல்லையா? என்பதாகும்.

**இருதரப்பும் கேட்கப்பட்டது**

5) மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக சான்றாவணங்களை குறியீடு செய்வதற்காக மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.3/23 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு அனுமதிக்கப்பட்ட நிலையில் மனுதாரர் தரப்பில் 04.12.2023–ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் முதல்நிலை சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

6) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு உடல்நிலை குறைவு ஏற்பட்டது என்பது பொய்யானது என்றும், மனுதாரர் குறியீடு செய்யவிருக்கும் ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்டவை என ஆட்சேபனை செய்தாலும், மனுதாரர் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்துள்ளதாலும், ஆவணங்களை குறியீடு செய்யும் போது தான் அதற்கான ஆட்சேபனைகளை பதிவு செய்ய இயலும் என்பதாலும்,

மனுதாரருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கும் பொருட்டு வா.சா1 சாட்சியை மீண்டும் திரும்ப அழைத்து விசாரிக்க அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

7) இறுதியாக,

மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது இன்று 22.03.2024–ம் தேதியன்று என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–செ.ராஜ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u>

இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u>

இல்லை.

/உண்மை நகல்/

S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.